1971 டிசம்பர் 9]

திரு. கா. காளிமுத்து : உதகையில் உள்ள 'தமிழகம்' என்னும் விடுதியில் மட்டுமல்லாமல், தமிழகம் எங்குமுள்ள சுற்றுலா விடுதிகளில் சட்ட மன்ற உறுப்பினர்களுக்குக் கட்டணச் சலுகை வழங்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஏற்கனவே இந்தக் கேள்விக்கு நான் பதில் சொல்லிவிட்டேன்.

வளர்மானப் பணிகள் பற்றிய விளம்பரம்

*** 188 வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

சென்னை பத்திரிகை நிருபர்களை மாவட்டங்களுக்கு அழைத்துச் சென்று வளர்ச்சிப் பணிகளை சுற்றிக் காண்பிக்கும் திட்டம் தற்போது எந்நிலையிலுள்ளது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சென்னை மாநகரிலுள்ள இதழ்துறையாளர்களை மாவட்டங்களுக்கு அழைத்துச் சென்று அங்கு செயல்படுத்தப்படும் வளர்ச்சிப் பணிகளைச் சுற்றிக் காண்பிக்கும் திட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது. இத் திட்டத்தின்படி, அண்மையில்—1971-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12-ம் தேதி முதல் 14-ந் தேதி வரை தென்னாற்காடு மாவட்டத்தில் நிறைவேற்றப்படும் "வீராணம் திட்டத்தையும்" தஞ்சை மாவட்டத்தில் உள்ள "தில்லையாடி வள்ளியம்மை நகர் திட்டத்தையும்" காண்பிக்க இதழ்துறையாளர்கள் சுற்றுப் பயணம் மேற்கொள்ளப்பட்டது. அப்போது தஞ்சை மாவட்டத்தின் பல பகுதிகள் அவர்களுக்குச் சுற்றிக் காண்பிக்கப்பட்டன.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, கடந்த முறை பத்திரிகையாளர்களைச் சில மாவட்டங்களுக்கு அழைத்துச் சென்று சுற்றுப் பயணம் செய்து வைத்ததால் நல்ல பலன் ஏற்பட்டிருப்பதாக அறியப்படுகிறது. ஏனைய மாவட்டங்களுக்கும் அதை விஸ்தரிக்க அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதற்கு முன்பே ஒரு தடவை எல்லா மாவட்டங்களுக்கும் பத்திரிக்கையாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு இந்த அளவுக்கு அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள். அடுத்தும் அவர்கள் அழைத்துச் செல்லப்படுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அப்படிச் சென்றவர்கள் நல்ல நியாய உணர்வோடு தங்கள் பத்திரிகைகளில் தாங்கள் கண்டதையும் கேட்டதையும் நல்ல கருத்துக்களையும் எழுதியிருக்கிறார்கள்.

THIRU K. M. SUBRAMANIAM : In view of the over-publicity in radio and cinemas, is it necessary to have further publicity like this, spending Government money ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதை மேலும் ஒரு விளம்பரமாக எடுத்துக் கொள்ளக் கூடாது. பத்திரிகையாளர்களும் நாட்டு நிலையைச் சரிவரப் புரிந்துகொண்டு

அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் இருக்கும் தொடர்புகளை எந்த அளவுக்கு மேலும் வளர்க்க வேண்டும் என்பதற்கு அனுசரணையாக அவர்கள் எழுதவேண்டும் என்பதற்காகவும், அதன் மூலமாக மக்கள் போதிய பயிற்சிகளைப் பெறுவதற்கும் ஏதுவாக இருக்கும் என்பதற்காகவும் இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும். பொதுவாக, அரசாங்கத்தினுடைய விளம்பரத்திற்காக அல்ல; மக்களோடு அரசாங்கத் திட்டங்களைத் தொடர்புபடுத்துவதற்காக என்பதை நாம் உணர வேண்டும்.

திரு. நா. வீராசாமி: இப்படிப் பத்திரிகையாளர்கள் தமிழகத்தினுடைய வளர்ச்சிகளை ஆங்காங்கு பார்த்தும், சில பத்திரிகைகள் உண்மைகளை எழுதுவதில்லை. அப்படிப்பட்ட பத்திரிகைகள் மீது அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா? அல்லது, இனியாவது எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சில பத்திரிகைகள் உண்மையை எழுதுவதில்லை என்பது, என்னைவிட மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

திரு. கே. என். குமாரசாமி: தமிழ்நாட்டின் வேலைத் திட்டங்கள், வளர்ச்சித் திட்டங்களைப் பொறுத்து சினிமாப் படம் பிடித்து விளம்பரம் செய்ய அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்போதே அந்த முயற்சிகள் செய்யப்படுகின்றன. மேலும் அது தீவிரமாக்கப்படும்.

திரு. பெ. சௌந்தர பாண்டியன்: நம்முடைய அரசாங்கம் ஏற்பட்ட பிறகு தமிழகத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை வெளி மாநில, வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களையும் அழைத்து வந்து காட்டும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: வெளி மாநிலத்திலுள்ளவர்களுக்கு அந்த அக்கறை இருந்தால் அவர்கள் வந்து பார்த்துச் செல்லலாம். ஆனால், நம்முடைய மாநில வளர்ச்சிகளை நம் மாநிலத்திலுள்ள பத்திரிகையாளர்கள் பார்வையிட்டு அதுபற்றிச் சிறப்பாக எழுதுவதும் மக்களைத் தொடர்புபடுத்துவதும் தான் நியாயம் என்று அரசு கருதுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: மத்திய அரசு, பொதுத்துறை எம்மாதிரி செயல்படுகிறது என்பதை அறிந்துகொள்வதற்காக பத்திரிகையாளர்களை இம்மாதிரிப் பயணத்திற்கு அனுப்புகிறார்கள். அந்த முறையில், தமிழகத்தில் பல பொதுத்துறை ஸ்தாபனங்கள் இப்பொழுது நடந்து கொண்டிருக்கக் கூடிய நிலையில் அவற்றைப் பார்வையிட்டு அவர்களுடைய கருத்துக்களை எழுதுவதற்காக அனுப்பப்படுவார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எல்லா மாவட்டங்களிலும் பொதுவாக அவர்கள் அந்தத் துறையைப் பார்வையிடுவதற்கு வசதிகளும் வாய்ப்புகளும் ஏற்படுத்தித் தரப்படும்.

1971 டிசம்பர் 9]

திரு. மு. சுருளிவேல் : தலைவர் அவர்களே, நாம் என்னதான் பத்திரிகை நிருபர்களை அழைத்துச் சென்றாலும், ஒருசில பத்திரிகைகள், தங்களுடைய பொருளாதாரக் கொள்கையின் காரணமாக, இந்த அரசாங்கத்தினுடைய திட்டங்கள் ஏழை எளியவர்களுக்குப் பயனளிக்கும் காரணத்தாலும், முதலாளித்துவ வர்க்கத்திற்கு எதிராக இருக்கின்ற காரணத்தாலும், பாராட்டி எழுதத் தவறுகின்ற காரணத்தால், அத்தகைய பத்திரிகைகளின் நிருபர்களை அழைக்காமலிருக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அழைக்கும்போதே அவர்களை, 'நீங்கள் பாராட்டித்தான் தீரவேண்டும்' என்று நிபந்தனை வைத்து அழைக்க முடியாது. 'விமரிசனம் செய்யுங்கள்' என்றுதான் அழைக்க முடியும். விமரிசனம் செய்வது அவர்களுடைய உரிமை, ஆகவே, அந்த உரிமையை அவர்கள் பயன்படுத்துகிறார்கள். விமரிசனம் சரியா, இல்லையா என்பதை ஆராய்ந்து தீர்ப்பளிப்பது பொது மக்களுடைய உரிமை.

கள்ளப்பள்ளி ஊராட்சி

*189 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், கள்ளப்பள்ளி பஞ்சாயத்து செயல்படாமல் இருப்பது குறித்து, பஞ்சாயத்து உறுப்பினர்கள் சமீபத்தில் அரசின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளனரா?

(இ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை. புகார் மனு மட்டும் வந்துள்ளது.

(இ) மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : குளித்தலை வட்டம், கள்ளப்பள்ளி ஊராட்சி மன்றம் கடந்த ஆறு மாத காலமாகச் செயல்படாமல் இருப்பதுதான் உண்மை, இதை நான் அந்தத் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் என்ற முறையில் நன்றாக அறிவேன். பொதுமக்களின் அன்றாடத் தேவைகளுக்கான பணிகள் செய்யப்படாமலிருப்பதாக எனக்கும் அடிக்கடி புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, மாற்றுத் திட்டம் ஏதாவது ஏற்பாடு செய்து அதை உடனடியாகச் செயல்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஊராட்சிக் கணக்கைத் தணிக்கை செய்து, ஏற்பட்டிருந்த குறைபாடுகள் சம்பந்தமாக முழு அறிக்கை அனுப்பும்படியாக கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு மாவட்ட ஆட்சியாளர் உத்தர